மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் செயற்றிட்டம்

முன்னோடி பரீட்சை - 2016

வினாத்தாள் - 5

பகுதி - 1


காலம் : 45 நிமி

சுட்டெண் : .....


- எல்லா வினாக்களுக்கும் விடைதருக.
- 1 – 40 வரையிலான வினாக்களுக்கான மிகப் பொருத்தமான விடையை தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

கீழேயுள்ள மூன்று படங்களில் ஒன்று வித்தியாசமானது. அதனைத் தெரிந்து கோடிடுக.

01.



02.



இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

03. நண்பன் - பகைவன், பாம்பு - .....

1. உடும்பு
2. மலைப்பாம்பு
3. கீரி

04. மாதா–அன்னை, மனைவி - .....

1. பெண்
2. துணைவி
3. மங்கை

எழுத்துப் பிழையில்லாத சொல்லைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

05. 1. வுழக்கறிஞர் 2. வளக்கறிஞர் 3. வலக்கறிஞர்

06. 1. சவுக்காரம் 2. சவர்க்காரம் 3. சவர்காறம்

07. 1. களனி 2. கலனி 3. கழனி

வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக.

மாம்பழம் ஒன்றின் விலை →	அப்பிள் ஒன்றின் விலை
அப்பிள் ஒன்றின் விலை ←	தோடம்பழம் ஒன்றின் விலை
தோடம்பழம் ஒன்றின் விலை →	மாம்பழம் ஒன்றின் விலை


குறைவு →	அதிகம்
அதிகம் ←	குறைவு

08. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பழங்களின் விலைகளை இறங்குவரிசைப்படுத்தி எழுதினால் விடையாகப் பெறப்படுவது.

PIRASANNA www.ikedu.lk

1. அப்பிள், மாம்பழம், தோடம்பழம்
2. தோடம்பழம், அப்பிள், மாம்பழம்
3. மாம்பழம், தோடம்பழம், அப்பிள்

தாயக்கட்டையொன்றில் இலக்கங்கள் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளன.



09. இலக்கம் இரண்டிற்கு எதிரே உள்ள இலக்கம் யாது?

1. 6 2. 5 3. 4

10. கீழே வழங்கப்பட்டுள்ள எண்கோலத்தை அறிந்து இடைவெளிக்குப் பொருத்தமான இலக்கத்தின் கீழ் கீறிடுக.

2, 7,....., 23, 34, 47

1. 40 2. 10 3. 14

❖ வழங்கப்பட்டுள்ள குறியீடுகளில் இருந்து 11, 12ஆம் வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

பிள்ளைகள் வீடு செல்கிறார்கள். - BAC

மாணவன் பாடசாலை செல்கிறான். - DFE

பிள்ளைகள் எழுத்து எழுதுகிறார்கள். - AGH

சமன் குளிக்கச் செல்கிறான். - IFK

11. பிள்ளைகள் என்ற சொல்லுக்குரிய குறியீடாக அமையக்கூடியது.

1. F 2. A 3. B


12. செல்கிறான் என்ற சொல்லின் குறியீடாக வரக்கூடியது.

1. A 2. F 3. E


13. 639 ⟶ 396 ⟶ 963 ⟶..... இடைவெளிக்கு வரவேண்டிய எண்.

1. 936 2. 693 3. 639

14. சமச்சீர் அச்சுக்கள் சரியாக வரையப்பட்டுள்ள உருவின் கீழ் கோடிடுக.



15. கீழ் தரப்பட்டுள்ள படத்தின் சரியான கருத்தின் விடையாக அமைவது.




PRASANNA www.1kedu.lk


1. Bயில் இருந்து A,D யின் ஊடாக E வரை பயணம் செய்யும் தூரம் Bயில் இருந்து C,D ஊடாக E வரை செல்கின்ற தூரத்தைவிட அதிகமாகும்.

2. Aயில் இருந்து F,E யின் ஊடாக D வரை பயணம் செய்யும் தூரம் Bயில் இருந்து A ஊடாக D வரை செல்கின்ற தூரத்திற்கு சமனாகும்.

3. மேலே கூறப்பட்ட விடைகள் இரண்டும் சரியானவை.

16. இந்தப் படத்தில் நிழற்றப்பட்டுள்ள பகுதிக்கு சமனான பின்னத்தை தரும் உருவைத் தெரிவுசெய்க.





1




2




3

17.முதலாவது உருவிற்கு பொருத்தமான உருவை தெரிவுசெய்க.






1




2



3

18. கீழே தரப்பட்டுள்ள படத்தில் இடைவெளிக்கு பொருத்தமான பகுதியை தெரிவுசெய்க.






1



2



3

19. காலை 7.00 மணிக்கு வெவ்வேறு மணிகள் ஒரே தடவையில் ஒலிக்கின்றன. இதில் முதலாவது மணி 10 நிமிடத்திற்கு ஒரு தடவையும், இரண்டாவது மணி 15 நிமிடத்திற்கு ஒரு தடவையும், மூன்றாவது மணி 20 நிமிடத்திற்கு ஒரு தடவையும் ஒலிக்கும். எனின் மூன்று மணிகளும் மீண்டும் ஒரே தடவையில் ஒலிக்கின்ற நேரம் யாது?

1. மு.ப 7.40 2. மு.ப 8.00 3. மு.ப 8.30

20 21ஆம் நூற்றாண்டின் 2ஆம் தசாப்தமாக வரக்கூடிய வருடம்

1. 2009 2. 2014 3. 2022

21. ஐந்து அழிறப்பர்களின் விலைக்கு ஒரு பென்சில் வாங்கலாம். பென்சில் இரண்டின் விலைக்கு பேனை ஒன்று வாங்கமுடியும். இரண்டு பேனைகளின் வாங்கக்கூடிய அழிறப்பர்களின் எண்ணிக்கை யாது?

1. 18 2. 20 3. 24

PIRASANNA
www.lkedu.lk

22. முக்கோண வடிவமான பூப்பாத்தி ஒன்றைச் சுற்றிவேலி அமைக்கப்பட்டுள்ளது. ஒரு பக்கத்தில் இருந்து பார்க்கும்போது 11 தூண்கள் தென்படுகின்றன. எனின் மூன்று பக்கங்களிலும் உள்ள தூண்களின் எண்ணிக்கை யாது?


1. 33 2. 32 3.30

23. கோலத்திற்கு அமைய அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



1 2 3

24. இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.



1) 18 2) 20 3) 15

25. கடிகாரம் ஒன்றின் மணிமுள் 3இலும், 9இலும் அமையும் சந்தர்ப்பங்கள் இரண்டு ஆவது.

1. மு.ப 3.15, பி.ப 9.15 2. பி.ப 3.00, மு.ப 9.00 3. மு.ப 10.15, பி.ப 1.45

26. மூன்று வருடங்களுக்கு முன்பு அண்ணாவின் வயது தங்கையின் வயதின் இரு மடங்கிலும் ஒன்று அதிகமாகும். தங்கையின் வயது தற்போது 7 ஆகும். அண்ணாவின் தற்போதைய வயது எத்தனை?

1. 8 2. 9 3. 12

27. டிசம்பர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமையாகும். அம்மாதத்திலுள்ள சனிக்கிழமைகளினதும், ஞாயிற்றுக் கிழமைகளினதும் எண்ணிக்கையை முறையே காட்டும் விடைஎது?

1. 5, 5 2. 5, 4 3. 4, 5

28. ரம்யா புகைப்படம் ஒன்றைக் காட்டி இப்படத்தில் இருப்பவரின் தாய், எனது அம்மாவின் தாய் ஆவார் எனக் கூறினாள். படத்தில் இருப்பவர் ரம்யாவுக்கு என்ன உறவுமுறை?

1. சித்தி 2. மாமி 3. மருமகள்

29. ஓர் எண்ணுடன் 4ஐக் கூட்டி அதனை 8ஆல் பெருக்கும்போது வரும் விடை 72 ஆகும். அந்த எண் யாது?

1. 4 2. 5 3. 3

30. பேருந்து ஒன்று மு.ப 10.00 மணிக்கு பயணத்தை ஆரம்பித்து மு.ப 11.45க்கு தேனீர் அருந்துவதற்காக நிறுத்தப்பட்டு பி.ப 12.05க்கு பயணத்தை ஆரம்பிக்கின்றது. அப்பேருந்து பி.ப 1.15க்கு குறித்த இடத்தைச் சென்றடைகின்றது. அப்பேருந்து பயணத்திற்காக எடுத்துக்கொண்ட நேரம் யாது?

1. 2 மணி 55 நிமிடம் 2. 2 மணி 15 நிமிடம் 3. 2 மணி 5 நிமிடம்

❖ கீழேதரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து 31ஆம் வினாவுக்கான விடையைத் தெரிவுசெய்க.


17	18	A
16	15	B
23	C	21

31. A,B,C ஆகியவற்றின் பெறுமதிகள் முறையாக அமைந்த விடை.

1. 22, 19, 20
2. 19, 20, 22
3. 20, 22, 19

RIRASANNA
www.lkedu.lk

32. கீழே தரப்பட்டுள்ள படத்தில் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை.



1. 18
2. 20
3. 23

33. நீலம், சிவப்பு, மஞ்சள், வெள்ளை மாபிள்கள் மூன்றுவீதம் பெட்டி ஒன்றிலுள்ளது. அதில் வெள்ளை மாபிள் ஒன்றை எழுமாறாக பெற்றுக்கொள்வதற்கு குறைந்தபட்சம் எத்தனை மாபிள்களை எடுக்கவேண்டும்?

1. 4 2. 9 3. 10

34. கீழே தரப்பட்டுள்ள எழுத்துக்களினதும், எண்களினதும் கோலத்தை அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

A ⟶ 4 C ⟶ 8 D ⟶ ..... E ⟶ 12 G ⟶ 16 H ⟶ 18

1. 10 2. 14 3. 17

35. வரிசையொன்றில் 6ஆவது பிள்ளையாக ரமேஷ் நிற்கிறான். அவனுக்கு முன்னால் குமாரும், பின்னால் சசியும் நிற்கின்றனர். சசிக்குப் பின்னால் 10 பேர் நிற்கின்றனர். வரிசையில் நிற்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

1. 15 2. 17 3. 16

36. அடுத்துவரும் இரு எண்களைக் கூட்டும்போது விடை 45 ஆகும். அதில் ஆகச் சிறியஎண் யாது?

1. 15 2. 22 3. 25

37. சதுரம் ஒன்றின் ஒருபக்க நீளம் 6cm.ஆகும். அவ்வாறான மூன்று சதுரங்களை இணைத்து உருவாக்கக்கூடிய செவ்வகத்தின் சுற்றளவு யாது?


1. 18 cm 2. 48 cm 3. 36 cm

38. கனவுரு ஒன்றின் உரு படத்தில் உள்ளவாறு காட்டப்பட்டுள்ளது. உங்களுக்கு தெரிகின்ற பக்கத்துக்கு எதிர்ப்பக்கமானது அதன் இரு மடங்காகும். அதன்படி 6 பக்கங்களினதும் பெறுமானம் யாது?



1. 18
2. 20
3. 24

கீழேயுள்ள படத்தைப் பயன்படுத்தி விடையைத் தெரிக.



39. ஒரு விளையாட்டை மட்டும் விரும்புவோரின் எண்ணிக்கை யாது?

1. 16 2. 28 3. 44

40. இரு வகையான விளையாட்டை மட்டும் விரும்புவோரின் எண்ணிக்கை யாது?

1. 18 2. 22 3. 16

PIRASANNA www.lkedu.lk

மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் செயற்றிட்டம்

முன்னோடி பரீட்சை - 2016

வினாத்தாள் - 5

பகுதி - 11

சுட்டெண் : ..... காலம் : 1மணி 15 நிமி

எல்லா வினாக்களுக்கும் விடைதருக.

* பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைஎழுதுக.

கருங்குருவி ஒன்று அங்குமிங்கும் இரைதேடி அலைந்தது. அது எல்லா இடமும் பறந்துபறந்து திரிந்ததில் களைத்துவிட்டது. கடைசியில் களைப்பைப் போக்க ஆற்றங்கரைக்கு வந்தது. ஆற்றுநீரை ஆசையாகப் பருகத் தொடங்கியது. அந்தநேரம் ஆற்றுநீரில் "பொத்தென்று" ஏதோ விழுந்த சத்தம் கேட்டது. திடுக்கிட்ட கருங்குருவி சத்தம் வந்த திசையினை நோக்கியது. தூரத்தில் கருமை நிறத்தில் ஏதோ ஒன்று தென்பட்டது.

1. பந்தியில் வந்துள்ள இணைமொழியை எழுதுக. .....
2. பெயரடைமொழி ஒன்றை எழுதுக. .....
3. மடக்கேறும் அரவும் வந்துள்ள சொல் ஒன்றை எழுதுக. .....
4. அடுக்குமொழியை எழுதுக. .....
5. அ.ிணை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக. .....
6. அ.றிணை, ஒருமை, படர்க்கை வினைச்சொல் ஒன்று எழுதுக.....
7. "பொத்தென்று"என்பதில் வந்துள்ள நிறுத்தற்குறி யாது? .....

02. பின்வரும் பழமொழிகளைப் பூரணப்படுத்துக.

1. ஓட்டைச் சட்டையானாலும் ..... வெந்தால் சரி.
2. ஈட்டிஎட்டினமட்டும் பாயும் .....பாயும்

03. பின்வரும் தொடர்மொழிகளுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1. காலையிலேனும் பகலிலேனும் கூடும் சந்தை - .....
2. தான் பிறந்த நாட்டை நேசிப்பவன் - .....
3. அரண்மனையில் பெண்கள் வாழும் இடம் - .....

04. பின்வருவனவற்றில் எழுத்துப் பிழைகளற்ற சொல்லைத் தெரிந்து கோடிடுக.

அ. 1. பயிர்ச்சி 2. பயிட்சி 3. பயிற்சி 4. பயிச்சி

ஆ. 1. எண்ணை 2. எண்ணெய் 3. என்னை 4. என்நெய்

05. மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.

1. நட்டாற்றில் விடுதல் - .....
2. கல்லில் நாருரித்தல் - .....

PIRASANNA
www.lkedu.lk

06. கீழே காணப்படும் வாக்கியத்தில் கோடிடப்பட்டுள்ள சொற்களின் கருத்தை எழுதுக.

தம்பி படியில் அமர்ந்து படித்தான்.

1ஆவது படி - ..... 2ஆவது படி - .....

07. தரப்பட்டுள்ள பன்மை வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக மாற்றுக.

மரங்கள் சரிந்து விழுந்தன - .....

08. வாக்கியத்தில் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

நன்றி தாயே நாங்கள் பயணத்தைத் தொடங்கப் போகிறோம்

09. கீறிட்ட இடத்தை நிரப்பி வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

உறுதியும், உழைப்பும் உள்ளவனுக்கு..... ..... என்பது லூயி பாஸ்டரின் கொள்கையாகும்.

10. தரப்பட்டுள்ள சொல்லுக்கு ஒத்தகருத்து சொல்லை எழுதுக.

1. அழுக்காறு - .....

11. படத்தைப் பார்த்து அது ஆங்கிலத்தில் கூறப்படும் விதத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.





....

12. கீழே காணப்படும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

தயவுசெய்து உங்கள் புத்தகத்தைத் திறவுங்கள்.

.....

13. கருத்தைத் தமிழில் எழுதுக.

1. Be careful - .....

2. Wonderful - .....

3. what is it? - .....

14. கீழே தரப்பட்டுள்ள வசனத்தை சிங்களத்தில் கூறும் விதத்தைத் தமிழில் எழுதுக.

1. மணி ஒலிக்கிறது - .....

15. கீழே காணப்படும் சிங்கள வசனத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.

ஓபட படகினித? - .....

(32X1=32புள்ளிகள்)

PIRASANNA www.lkedu.lk

16. விலங்குகளும் சுற்றாடலில் ஒரு அங்கமாகும். இவ்விலங்குகள் சுற்றாடலில் ஏற்படும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கும் விதத்தினை விளக்கி 5 சொற்களுக்குக் குறையாத 3 வாக்கியங்கள் எழுதுக. (எழுவாய், பயனிலை திருத்தமாக அமையவேண்டும்.)

4. .....

.....

5. .....

.....

6. .....

.....

(2X3=6புள்ளிகள்)

17. எண்கோலத்திற்கமைய அடுத்துவரும் இரு எண்களை எழுதுக.

1. 4360, 4460, 4560, 4660,.....


18. பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

பத்துக்கள், ஆயிரங்கள், ஒன்றுகள், நூறுகள். .....

19. வசிரின் வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் 3km 800m ஆகும். அவன் 900m தூரத்தை நடந்தும் மிகுதி தூரத்தை பேருந்திலும் சென்றான். பேருந்தில் பயணம் செய்த தூரம் எவ்வளவு? .....

20. 175 பூக்களைக் கொண்டுவந்த ரகு அவற்றைக் கொண்டு 35 மலர்ச்செண்டுகளை செய்தானெனின் ஒரு மலர்ச்செண்டிலுள்ள மலர்களின் எண்ணிக்கை யாது? .....

21. அருகில் காணப்படும் உருவிலுள்ள



1. முக்கோணிகள் - .....

2. செங்கோணங்கள் - .....


22. வளைந்த மேற்பரப்புடைய முப்பரிமாண வடிவத்தின் பெயர் என்ன? .....

23. பி.ப 2.25க்கு வீட்டிலிருந்து புறப்பட்ட குமார் 15 நிமிடங்களின் பின்னர் நூலகத்தை அடைந்தான். அவன் 30 நிமிடங்கள் அங்குதரித்து நின்று மீண்டும் வீட்டைநோக்கி புறப்பட்டான்.


1. குமார் நூலகத்திலிருந்து புறப்பட்ட நேரம் யாது? .....

2. அந்நேரத்தை நியம நேரத்தில் எழுதுக. .....


24. 3cm நீளமும், அகலமும், உயரமும் உடைய சதுரமுகி ஒன்றை ஆக்குவதற்கு 1 cm நீளம், அகலம், உயரம் உடைய சதுரமுகிக் குற்றிகள் எத்தனை தேவை? .....



ரூ 47.00



ரூ 95.00



ரூ 167.00

PIRASANNA www.lkedu.lk

மேலே கொடுக்கப்பட்டுள்ள படங்களை அவதானித்து விடைகளுக்கு விடைஎழுதுக.


25. வாழைப்பழம் ஒன்றின் விலை என்ன? - .....

26. மாம்பழம் ஒன்றின் விலை என்ன? .....

27. 6 மங்குஸ்தான்கள் வாங்கும் பணத்திற்கு எத்தனை வாழைப்பழங்கள் வாங்கலாம்?

.....

28. கொடுக்கப்பட்டுள்ள அளவீடுகளைக் கொண்டு உருவத்தின் சுற்றளவைக் காண்க.



.....

ஒருகடையில் நாளொன்றில் விற்கப்பட்ட இனிப்புக்களின் விபரம் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

இனிப்பு வகைகள்	விற்கப்பட்ட எண்ணிக்கை
1. எள்ளுருண்டை	10 கொண்ட 8 பைக்கற்றுகள்
2. பால்டொபி	12 கொண்ட 9 பைக்கற்றுகள்
3. அலுவா	18 கொண்ட 6 பைக்கற்றுகள்

29. விற்கப்பட்ட பால்டொபிகள் எத்தனை? .....

30. விற்கப்பட்ட மொத்த இனிப்புகள் எத்தனை? ..... (16X2=32புள்ளிகள்)

* 31 தொடக்கம் 60 வரையான வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

31. பின்வரும் வித்துக்களில் பருமனில் கூடிய வித்து எது?

1. துத்திரி 2. மரமுந்திரிகை 3. பலா 4. மா

32. இலையொன்றை முறிக்கும்போது பால் வெளியேறாத தாவரம்.

1. ஈரப்பலா 2. பலா 3. அரலி 4. கொய்யா

33. கொடிவகைக்கு உதாரணமாக அமையாதது.

1. நன்னாரி 2. வெற்றிலை 3. நொச்சி 4. பாகல்

34. மருந்துக்காக மகரந்த மணிகள் பயன்படுகின்ற பூ.

1. நாகலிங்கம் 2. ரோசா 3. நாகமலர் 4. மல்லிகை

35. இலங்கைக்கே உரித்தான விலங்கினம்.

1. சருகுமான் 2. முயல் 3. ஒட்டகம், 4. பசு

36. அதிக விட்டமின்கள் உள்ளடங்கிய உணவுவகை.

1. பலா 2. முட்டை 3. அப்பம் 4. தோடம்பழம்

37. கொள்ளை நோய் பரவுவது.

1. எலி 2. ஈடிஸ் நுளம்பு 3. நாய் 4. பன்றி

PRASANNA www.lkedu.lk

38. கறையான் பற்றி எழுதப்பட்டுள்ளவற்றுள் உண்மையானது.

1. விஷத்துடன் கூடியபூச்சி
2. உணவை சேமித்து வைக்கும்
3. குட்டியீன்று இனப்பெருக்கம் செய்யும்
4. சூழல் நேயமான பூச்சியினம்

39. அச்சாறு தயாரிக்கப் பொருத்தமான பாத்திரம்.

1. மண் பாத்திரம்
2. அலுமினிய பாத்திரம்
3. இரும்புப் பாத்திரம்
4. பித்தளைப் பாத்திரம்

40. சுத்தமான நீரின் பண்பு அல்லாதது.

1. நிறம் உள்ளது
2. சுவையற்றது
3. மணமற்றது
4. கிருமிகளற்றது.





41. பலகையொன்றில் ஆணியைஅடிக்கப் பயன்படுத்தும் உபகரணம்.

1. மரச்சுத்தியல்
2. சுத்தியல்
3. சிப்டர் சாவி
4. குறடு

42. எமது நாட்டின் ஈரவலயப் பிரதேசத்தில் அமைந்துள்ள இயற்கைவனம்.

1. குமண
2. வில்பத்து
3. சிங்கராஜ
4. வஸ்கமுவ

43. பின்வரும் தையல்களில் கோழிக்கால் தையல் முறையாக அமைவது.

1. 
2. 
3. 
4. 

44. தென் மாகாணத்திலுள்ள புராதன ஸ்தானம்.

1. சமாதிபுத்தர்
2. வட்டதாகை
3. சுதந்திரசதுக்கம்
4. ஒல்லாந்தர் கோட்டை

45. வரலாற்றுப் பிரசித்திபெற்ற சோமாவதி வணக்கத்தலம் அமைந்துள்ள மாகாணம்.

1. வடமத்தியமாகாணம்
2. ஊவாமாகாணம்
3. மத்தியமாகாணம்
4. கிழக்குமாகாணம்

46. உலக விசேட தேவையுடையோர் தினம்

1. டிசம்பர் 3
2. யூன் 5
3. ஒக்டோபர் 15
4. செப்டெம்பர் 8


47. அரச இலட்சினையில் காணப்படாததொன்று.

1. சூரியன்
2. சந்திரன்
3. நட்சத்திரம்
4. தர்மசக்கரம்

48. பிசைந்த களிமண்ணைக் கையால் உருட்டி இணைத்து செய்யும் செயற்பாடு.

1. வனைதல்
2. கொலாஜ்
3. பறித்தல்
4. செதுக்கல்

49. படத்தில் காணப்படுவது எத்தனையாவது படிமுறை



1. இரண்டாவது நிலை
2. நான்காவது நிலை
3. ஆறாவது நிலை
4. பத்தாவது நிலை

50. தற்காலத்தில் இலங்கையில் பயன்படுத்துகின்ற பெறுமதி கூடிய காசுத்தாள்.

1. ஐயாயிரம் ரூபாய்
2. பத்தாயிரம் ரூபாய்
3. ஆயிரம் ரூபாய்
4. இரண்டாயிரம் ரூபாய்

PRASANNA www.lkedu.lk

51. பூரணசந்திரன் தோன்றி 7 நாட்களின் பின் சந்திரன் தெரியும் விதம்.

1. 
2. 
3. 
4. 

52. இவ்வுபகரணம் பயன்படுத்தப்படுவது.




1. மின்னைப் பரிசோதிக்க
2. பலகையில் துளையிடுவதற்கு
3. திருகாணியைகழற்றுவதற்கும்,பூட்டுவதற்கும்
4. ஆணியைக் கழற்றவும் இறுக்குவதற்கும்

53. மஞ்சள் நிறப் பின்னணியில் கறுப்புநிறத்தில் காணப்படும் இந்த வீதிசமிக்ஞை குறிப்பது.



1. வட்டமாக சுற்றிச் செல்லுங்கள்
2. மீள் சுழற்சி
3. அம்புக் குறியின் வழியே செல்லுங்கள்
4. முன்னால் சுற்றுவட்டம்

54. நீருடன் தேங்காயெண்ணெய் கலந்திருப்பதை சரியாகக் காட்டும் படம்.



55. மலைநாட்டுப் பிரதேசங்களில் தொடர்ந்து மழைபெய்வதால் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தம்.

1. கடல்கோள்
2. ஆறு பெருக்கெடுத்தல்
3. மண்சரிவு
4. குளங்கள் பெருக்கெடுத்தல்

56. தண்டின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்.

1. பயற்றங்காய்
2. அவரை
3. கரட்
4. கங்கூன்

57. திறந்தவெளியில் புற்தரையின் மீது விழுந்துள்ள ஈரப்பலா இலையொன்றை அகற்றும்போது மஞ்சள் நிறப் புற்கள் அவ்விலைக்கு அடியில் காணப்பட்டது. இதற்கான காரணம்

1. வெள்ளைப் புள்ளிகள் தோன்றுதல்
2. பசளை கிடைக்காமை
3. சூரியஒளி கிடைக்காமை
4. நீர் கிடைக்காமை

58. ஆதிகாலத்தில் இரவு தோன்றியதிலிருந்து விடியும் வரையில் உள்ள காலநேரத்தில் மேற்குத் திசையையும், கிழக்குத் திசையையும் சரியாகக் கணிக்க உதவியது.

1. வெள்ளி கோள்
2. வியாழன் கோள்
3. புளூட்டோ கோள்
4. சனிக்கோள்

PIRASANNA
www.lkedu.lk

59. பொலி பொலி தாயே என்பது.

1. தாலாட்டு பாடல்
2. சூடு மிதிக்கும் பாடல்
3. நாற்றுநடுகைப் பாடல்
4. கும்மிப்பாடல்

60. பௌத்த தர்மத்தை பாளிமொழியிலிருந்து ஆங்கிலத்துக்கும், இந்துசமயத்தை தமிழ் மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கும் மொழிபெயர்த்து இலங்கையில் வாழ்ந்த அதிசிறந்த வழக்கறிஞரும், மொழி பெயர்ப்பாளரும் ஆனவர்.

1. சேர் ஹென்றிஒல்கொட்
2. மார்டின் விக்கிரமசிங்க
3. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
4. சேர்.தொன். பாரோன் ஜயதிலக

(30X1=30புள்ளிகள்)

PIRASANNA
www.lkedu.lk